பயிற்சி / TUTORIAL

அ. வாக்கியங்களுகளில் சரியான இடங்களில் அரைப்புள்ளி மற்றும் முக்காற்புள்ளி இடுக.

1. குமுதன் அறிவியல் பாடத்தில் மிகுந்த நாட்டம் கொண்டான் [ ] அறிவியல் விழாவில் முதல் பரிசை வென்றான்.

2. தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்கள் [ ] சேரர், சோழர், பாண்டியர்.

3. பெயர் [ ] மாதவி.

4. மங்கை தங்க நகை வாங்கினாள் [ ] மகிழ்வுடன் அணிந்து கொண்டாள்.

5. குயவன் மண்ணைக் குழைத்தான் [ ] பானை வனைந்தான்.

6. வளர்தமிழ் விழாவில் நடைபெறு போட்டிகள் [ ] பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, பட்டிமன்றம் மற்றும் புதிர்ப்போட்டி.

7. புனிமலரின் கால் வீங்கியிருந்தது [ ] மருந்து போட்டார்.

8. அணிற்பிள்ளை மரத்தில் ஏறியது [ ] பழத்தைப் பறித்தது.

9. பிறந்த தேதி [ ] 27.01.2000

10. கனத்த மழை பெய்தது [ ] வெள்ளம் ஏற்பட்டது.

11. ஆசிரியர் [ ] மாணவர்களே அனைவரும் உங்கள் வீட்டுப் பாடத்தை முடித்து விட்டீர்களா?

    மாணவர் [ ] முடித்து விட்டோம் ஐயா!

12. அரவிந்தன் மரத்தில் ஏறினான் [ ] கீழே விழுந்து காயம் ஏற்பட்டது.

LIVEWORKSHEETS